Register No. [ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

**TA3A** **7180–26**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

CONSTITUTIONAL LAW – II

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss the election of the President and his powers with relevant provisions of the Constitution.

   குடியரசுத் தலைவரின் தேர்வு மற்றும் அவருடைய அதிகாரங்களை அரசமைப்புச் சட்ட வகையுங்களோடு விவாதிக்கவும்.

2. Explain the provisions relating to the financial relations between the Centre and the States.

   மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையிலான நிதி உறவுகள் தொடர்பான விதிகளை விளக்கவும்.

3. Explain the powers of the Parliament to amend the Constitution and state its limitations with decided cases.

   அரசமைப்புச் சட்டத்தை திருத்தும் பாராளுமன்றத்தின் அதிகாரங்களையும் அதன் கட்டுப்பாடுகளையும் பற்றி முடிவு செய்யப்பட்ட வழக்குகளோடு விளக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Critically examine the Pardoning Power of the President of India and the Governor of a State.

   இந்தியக் குடியரசுத் தலைவர் மற்றும் மாநில ஆளுநர் ஆகியோரது மன்னிக்கும் அதிகாரத்தைப் பற்றி கூர்ந்தாய்வு செய்யவும்.

5. Explain the jurisdiction of the supreme Court under Article 136 of the Constitution of India with decided cases.

தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளுடன் இந்திய அரசமைப்பின் 136வது ஷரத்தின் கீழ் உச்சநீதிமன்றத்தின் அதிகார வரம்பை விளக்கவும்.

6. "All Money Bills are Financial Bills"; but all Financial Bills are not Money Bills"-Substantiate the statement.

"அனைத்து பண மசோதாக்களும் நிதி மசோதாக்கள் ஆகும்; ஆனால் அனைத்து நிதி மசோதாக்களும் பண மசோதாக்கள் அல்ல". அறிக்கையை உறுதிப்படுத்தவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Comptroller and Auditor General of India.

இந்திய தலைமைத் தணிக்கை கட்டுப்பாட்டு அலுவலர்.

(b) Doctrine of Territorial Nexus.

நிலவரையறைத் தொடர்பு கோட்பாடு.

(c) Office of Profit.

ஆதாயம் தரும் பணி.

(d) Speaker of Lok Sabha

மக்களவைத் தலைவர்.

(e) Functions of Election Commission

தேர்தல் ஆணையத்தின் பணிகள்.

(f) State Emergency

மாநில நெருக்கடி நிலை.

(g) Colourable Legislation

உருமறை சட்டம்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. In a criminal case, an accused has been acquitted by the High Court. No appeal against the acquittal has been filed by the State to the Supreme Court. In these circumstances, a private party filed an appeal against the acquittal order of the High Court. Decide.

ஒரு குற்றவியல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் உயர்நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளார். விடுதலையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் அரசு மேல்முறையீடு செய்யவில்லை. இந்தச் சூழ்நிலையில் உயர்நீதிமன்றத்தின் விடுதலை உத்தரவை எதிர்த்து ஒரு தனியார் தரப்பினர் மேல்முறையீடு செய்தனர். முடிவு செய்யவும்.

9. A bill was introduced in Parliament on the recommendation of the President and after obtaining an opinion from the concerned State Legislature regarding division of the State. However, contrary to the opinion expressed by the concerned State Legislature, parliament passed the law. Decide on the constitutional validity of the law passed by the parliament.

ஒரு மாநிலத்தை பிரிப்பது தொடர்பாக அந்த மாநில சட்டமன்றத்தின் கருத்தை பெற்ற பிறகு மற்றும் குடியரசுத் தலைவரின் பரிந்துரைப்படி ஒரு சட்ட முன் வடிவு பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படுகிறது. ஆனால் அந்த மாநில சட்டமன்றம் தெரிவித்த கருத்திற்கு எதிராக பாராளுமன்றம் அச்சட்டத்தை நிறைவேற்றியது. அச்சட்டத்தின் அரசமைப்பு சட்டப்படியான செல்லத்தக்க நிலையை முடிவு செய்யவும்.

10. A notification for presidential election was challenged on the ground that two states were under presidential rule. Decide.

இரண்டு மாநிலங்கள் குடியரசுத் தலைவரின் ஆட்சியின் கீழ் இருக்கும் தருவாயில் குடியரசுத் தலைவரை தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டது. முடிவு செய்யவும்.

Register No. | | | | | | | | |

**TA3B** **7373–26**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

LAND LAWS

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Enumerate the procedure for acquiring surplus land above the ceiling area. How ceiling area of trust is calculated? Discuss.

   உச்சவரம்பு பரப்பளவிற்கு மேல் உபரி நிலத்தை கையகப்படுத்துவதற்கான நடைமுறையை பட்டியலிடு. அறக்கட்டளையின் உச்சவரம்பு பரப்பளவு எவ்வாறு கணக்கிடப்படுகிறது? விவாதிக்கவும்.

2. Who is an authorized officer under the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Act, 1971? What are his powers and functions under the Act?

   தமிழ்நாடு குடியிருப்பு உறைவிடம் கொண்டோர் (உடைமையுரிமை வழங்குச்) சட்டம் 1971 இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி என்பவர் யார்? சட்டத்தின் கீழ் அவரது அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் என்ன?

3. What are the powers of zamindars in different period? Why Government decided to abolish the zamindari system?

   வெவ்வேறு காலகட்டங்களில் ஜமீன்தார்களின் அதிகாரங்கள் என்ன? ஜமீன்தாரி அமைப்பு முறையை ஒழிக்க அரசாங்கம் ஏன் முடிவு செய்தது?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. When and how the rent is fixed or altered between landlord and tenant?

   நில உரிமையாளருக்கும் பயிரிடும் குத்தகைதாரருக்கும் இடையில் வாடகை எப்படி, எப்போது நிர்ணயிக்கப்படுகிறது அல்லது மாற்றப்படுகிறது?

5. How the right to property is subjected to change under the Constitution of India? Discuss.

இந்திய அரசமைப்பின் கீழ் சொத்துரிமை எவ்வாறு மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது? விவாதிக்கவும்.

6. Elucidate the grounds of eviction of tenant from the premises under the Tamil Nadu Regulation of Rights and Responsibilities of Landlords and Tenants Act, 2017.

தமிழ்நாடு வீட்டு உரிமையாளர் மற்றும் குத்தகைதாரரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை ஒழுங்குபடுத்தும் சட்டம் 2017இன் கீழ் குடியிருப்பில் இருந்து குத்தகைதாரரை வெளியேற்றுவதற்கான காரணங்களை தெளிவுபடுத்தவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக:

(a) Salient features of the Land Acquisition 2013.
நிலம் கையகப்படுத்துதல் சட்டம் 2013 இன் முக்கிய அம்சங்கள்.

(b) Record officer
பதிவுரு அதிகாரி

(c) Revenue Division Officer
வருவாய் கோட்ட அலுவலர்

(d) Bar of Jurisdiction of Civil Court
உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு தடை

(e) Land Board
நில வாரியம்

(f) Owners Association
உரிமையாளர்கள் சங்கம்

(g) Rent Court and Rent Tribunal
குத்தகை நீதிமன்றம் மற்றும் குத்தகை தீர்ப்பாயம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A Christian family consists of husband, wife and 3 unmarried daughters. The total land held by wife is 20 standard acres. Calculate surplus land to be acquired by the Government.

ஒரு கிறித்துவ குடும்பம் கணவன், மனைவி மற்றும் 3 திருமணமாகாத மகள்களைக் கொண்டது. மனைவி வைத்திருக்கும் மொத்த நிலம் 20 தரநிலை ஏக்கர் ஆகும். அரசாங்கத்தால் குடும்பத்திலிருந்து கையகப்படுத்தப்படும் உபரி நிலத்தைக் கணக்கிடுங்கள்.

9. Government proposed to acquire land for building of an educational institution for promotion of education in a joint venture. Whether the consent of people who are going to be affected is necessary? Discuss.

கூட்டு முயற்சியில் கல்வியை மேம்படுத்துவதற்காக ஒரு கல்வி நிறுவனத்தைக் கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்த அரசாங்கம் முன்மொழிந்தது. பாதிக்கப்படப் போகிற மக்களின் ஒப்புதல் அவசியமா? விவாதிக்கவும்.

10. An agricultural labour was given ownership right in a kudiyiruppu which is occupied by him. But after 1 year he leased the Kudiyiruppu to another person. The authorized officer came to know about the transfer. How the authorized officer could take action against the person? Discuss the relevant provisions.

ஒரு விவசாயத் தொழிலாளிக்கு அவர் குடியிருக்கும் குடியிருப்பில் உரிமை வழங்கப்படுகிறது, ஆனால் ஒரு வருடத்திற்கு பிறகு குடியிருப்பை வேறொருவருக்கு குத்தகைக்கு விட்டார். அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு இடமாற்றம் பற்றித் தெரியவந்தது. அதிகாரம் பெற்ற அலுவலர் எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்? விதிகளை விவாதிக்கவும்.

---

Register No. | | | | | | | | |

**TA3C**

**7374–26**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

INTERPRETATION OF STATUTES

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
★ ILLUPPUR - 622102. ★

Time : $2\frac{1}{2}$ hours                                                     Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What is statute and how far the different parts of it are useful for interpretation?

   சட்டம் என்றால் என்ன மற்றும் அதன் பல பகுதிகள் எவ்வாறு பொருள் விளக்கம் காண்பதற்கு பயனுள்ளதாக இருக்கும்?

2. Discuss the interpretation of Taxing Statutes with the help of decided cases.

   முடிவு செய்யப்பட்ட வழக்குகளோடு வரிச்சட்டங்களை பொருள் விளக்கம் காண்பதைப் பற்றி விவாதிக்கவும்.

3. Explain the general rules of construction with the help of General Clauses Act of 1897.

   1897-ம் ஆண்டு பொது வகையங்கள் சட்டத்தின் துணையோடு சட்டப் பொருள் விளக்கம் காண்பதற்கான பொதுவான விதிமுறைகளை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What is codified and consolidated statutes?

   தொகுப்பு மற்றும் ஒருங்கிணைந்த சட்டங்கள் என்றால் என்ன?

5. Explain the Golden Rules of interpretation in penal statutes?

குற்றச் சட்டங்களைப் பொருள் விளக்கம் காண்பதற்கான பொன் விதிகளைப் பற்றி விளக்குக.

6. Discuss the Preamble as a tool for interpreting constitutional provisions.

அரசமைப்புச் சட்டப் பிரிவுகளை பொருள் விளக்கம் காண அதன் முகப்புரை ஒரு கருவியாக பயன்படுகிறது என்பதைப் பற்றி விவாதிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Subsidiary Rules.

துணை விதிகள்.

(b) Commencement Clause.

துவக்க வகையம்.

(c) Non-obstante clause.

தடையற்ற வகையம்.

(d) Order and Rules.

கட்டளை மற்றும் விதிகள்.

(e) Foreign Court Decisions.

அயல்நாட்டு நீதிமன்றத் தீர்ப்புகள்.

(f) Presumption against violation of International Law.

பன்னாட்டுச் சட்ட மீறலுக்கு எதிரான அனுமானம்.

(g) Purposive construction

நோக்க அடிப்படையிலான பொருள் விளக்கம்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. During the Hindu marriage ceremony both bride and bridegroom took only three steps around sacred fire as per the direction of prohita. When they went to registrar office for registration, the registrar refused to register their marriage due to want of valid marriage ceremony. Discuss.

புரோகிதரின் அறிவுரைப்படி இந்து திருமண சடங்குப்படி மணமகள் மற்றும் மணமகனும் புனிதத்தீயை மூன்று முறை மட்டுமே சுற்றி வந்தனர். பிறகு தங்களுடைய திருமணத்தைப் பதிவு செய்யவேண்டி பதிவாளர் அலுவலகத்தை அணுகியபோது, பதிவாளர் போதுமான திருமணச் சடங்கை செய்து முடிக்கவில்லை என்பதன் அடிப்படையில் பதிவுசெய்ய மறுத்ததைப் பற்றி விவாதிக்கவும்.

9. State ‘A’ enacted Online Gambling Prevention Act to safeguard people from unnecessary exploitation of their wealth and subsequent suicide attempts. ‘X’ company challenges the validity of the legislation before State ‘A’ High Court. Accordingly that the subject matter of legislation belongs to the central subject and invalid. Discuss the validity of that legislation.

‘அ’ என்ற அரசு இணையவழி சூதாட்டத்தின் மூலம் பொதுமக்களின் செல்வங்கள் சுரண்டப்படுவதையும் அதனால் ஏற்படும் தற்கொலைகளையும் தடைசெய்ய வேண்டி இணையவழி சூதாட்ட தடை சட்டத்தைக் கொண்டுவந்தது. மேற்கண்ட சட்டமியற்றும் பகுதியானது மத்திய அரசுக்கு என்று ஒதுக்கப்பட்ட துறையாகையால் அச்சட்டம் செல்லாது என்று அறிவிக்கக் கோரி ‘X’ என்ற நிறுவனம் ‘அ’ என்ற அரசின் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. மேற்கண்ட சட்டத்தின் செல்லும் தன்மையினைப் பற்றி விவாதிக்கவும்.

10. GST Council imposed 5% & 12% of tax over rice and puffed rice respectively. A businessman who is pursuing puffed rice business challenges the same and pleaded before the court that there is no much difference between the two goods. Therefore varied GST tax on the puffed rice is arbitrary and invalid. Discuss the validity of the GST.

அரிசி மற்றும் பொரிக்கான GST வரியாக முறையே 5% & 12% வரியை பொருட்கள் மற்றும் சேவை வரிக் குழு விதித்தது. பொரி வணிகம் செய்யும் வியாபாரி மேற்கண்ட இரண்டு பொருட்களுக்கும் வித்தியாசம் ஏதும் இல்லாததால் பொரி வணிகத்தின் மீது 12% வரி விதித்தது செல்லாது மற்றும் எதேச்சதிகாரமானது என்று நீதிமன்றத்தில் முறையிடுகிறார். GST வரிவிதிப்பின் செல்லும் தன்மையினைப் பற்றி விவாதிக்கவும்.

---

Register No. | | | | | | | | |

**TA3D** **7181–26**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

COMPANY LAW

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Elucidate the role of Director in One Man Company under the Companies Act, 2013.

   தனி நபர் நிறுவனத்தின் இயக்குநரின் பங்கு பற்றி நிறுவனச் சட்டம் 2013-ல் கூறியுள்ள வரையறைகளைக் கூறுக.

2. Write in detail about the Corporate Social Responsibility for the corporate sectors in the Companies Act, 2013.

   நிறுவனங்களின் சமூகப் பொறுப்புகள் குறித்து நிறுவனச் சட்டம், 2013-ல் கூறுவதை விளக்கமாக எழுதுக.

3. What is the golden rule for framing prospectus? Examine the legal effects of untrue statements in the prospectus.

   திட்ட அறிவிப்பு குறித்த பொன்விதி என்றால் என்ன? திட்ட அறிவிப்பில் உண்மையற்ற கூற்றுகள் குறித்த சட்ட விளைவுகள் பற்றி ஆராய்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Examine the legal provisions relating to the alteration of Capital clause.

   மூலதனப் பகுதியை மாற்றுவது தொடர்பான சட்ட வகைமுறையங்களை ஆராய்க.

5. Explain the different kinds of companies and differentiate between private and public company.

நிறுவனத்தின் பல்வேறு வகைகளை விளக்கி தனியார் மற்றும் பொது நிறுவனத்தை வேறுபடுத்தி காட்டுக.

6. Briefly examine the establishment of SEBI (Securities and Exchange Board of India) and its powers and functions.

இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் அமைப்பு அதிகாரங்கள் மற்றும் பணிகளைப் பற்றி சுருக்கமாக ஆய்வு செய்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Reduction in Share capital

பங்கு மூலதன குறைப்பு

(b) Forged transfer

போலி கையொப்பமிட்ட மாற்றம்

(c) Lifting the corporate veil

நிறுவனத்தின் திரைச்சீலை நீக்கப்படுதல்

(d) Constructive notice

கொள்நிலை அறிவிப்பு

(e) Defunct company

செயலற்ற நிறுவனம்

(f) Share

பங்கு

(g) Doctrine of ultra vires.

அதிகார வரம்பு மீறல் கோட்பாடு.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Annual general meeting of a company for 2021 was not called but in 2022 a meeting for 2021 and 2022 was called and held. Is it legal and proper? Decide.

ஒரு நிறுவனத்தின் 2021-ஆம் ஆண்டின் பொதுக் கூட்டம் கூட்டப்படவில்லை. ஆனால் 2022-ஆம் ஆண்டில் 2021-ம் ஆண்டு மற்றும் 2022-ம் ஆண்டிற்கும் சேர்த்து அழைக்கப்பட்டு கூட்டம் நடத்தப்பட்டது. இது சட்டப்படியானதா? முறையானதா? தீர்மானிக்கவும்.

9. A prospectus contained a statement that the company had paid regular dividends for the last 7 years. This statement was factually not correct because only for the last 4 years the company had paid dividends out of the accumulated profits. Decide the validity of the prospectus and dividends.

நிறுவனத்தின் திட்ட அறிவிப்பில் கடந்த 7 ஆண்டுகளாக பங்காதாயங்கள் ஒழுங்காக கொடுத்து வந்தது என்று கூறப்பட்டது. இக்கூற்று சரியானது இல்லை, காரணம் கடந்த 4 ஆண்டுகளாக மட்டுமே அந்நிறுவனம் தனது திரட்டப்பட்ட இலாபங்களில் இருந்து பங்காதாயங்களை கொடுத்து வந்துள்ளது. திட்ட அறிவிப்பு மற்றும் பங்காதாயத்தின் செல்லத்தக்க நிலை குறித்து முடிவு செய்க.

10. 'A' transferred his shares to two persons and lodged the certificate to the company. The company certified the transfer but instead of destroying the original certificate, returned it to the transferor who borrowed money on it. Discuss the company's liability to the lender.

'அ' என்பவர் தன்னுடைய பங்குகளை இரண்டு நபர்களுக்கு மாற்றம் செய்ய வேண்டி அதன் சான்றிதழினை நிறுவனத்திடம் ஒப்படைத்தார். நிறுவனம் பங்கு மாற்றத்தினை பதிவு செய்து மூலச் சான்றிதழினை கோடிட்டு அழிக்காமல் அவரிடமே திரும்ப ஒப்படைத்தது. எனவே 'அ' என்பவர் அதன் மீது கடன் வாங்கினார். கடன் கொடுத்தவர் மீதான நிறுவனத்தின் பொறுப்பு குறித்து விவாதிக்கவும்.

---

Register No. | | | | | | | | |

**TA3E**

7182-26

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

BANKING LAW

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
★ ILLUPPUR - 622102. ★

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the banking procedure involved in opening and operating of bank accounts for special customers.

   சிறப்பு வாடிக்கையாளர்களுக்கு வங்கி கணக்கு தொடங்குவதற்கும் செயல்படுத்துவதற்கும் உரிய வங்கியியல் நடைமுறைகளை விளக்குக.

2. Describe the rights and liabilities of Banker on justified and unjustified dishonour of cheques.

   நியாயமான மற்றும் நியாயமற்ற காசோலை மதிப்பளிக்க மறுத்தலில் வங்கியரின் உரிமைகள் மற்றும் கடமைகளை விவரிக்கவும்.

3. Analyse the role of Reserve Bank of India as Banker to the Government and Banks.

   அரசாங்கத்திற்கும் வங்கிகளுக்கும் வங்கியராக செயல்படும் இந்திய ரிசர்வ் வங்கியின் பங்கை ஆராய்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. "Remedies under the Debt Recovery Tribunal and SARFAESI Act are cumulative" - Explain.

   "கடன் வசூல் தீர்ப்பாயம் மற்றும் சர்ஃபாசி சட்டத்தின் கீழ் வழங்கப்படும் தீர்வுகள் கூட்டு விளைவாகும்" - விளக்குக.

5. Who may cross the cheque? What are the kinds of crossing of cheque?

யார் காசோலையில் குறுக்குக் கோடிடலாம்? காசோலை குறுக்குக் கோடிடலின் வகைகள் யாவை?

6. Enumerate and explain the merits and demerits of Nationalisation of Banks.

வங்கிகளின் தேசீயமயமாக்கலின் நன்மைகள் மற்றும் தீமைகளை எடுத்துரைத்து விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Presentment for sight.

பார்வைக்காக முன்னிடல்.

(b) Banker's right of General Lien.

வங்கியரின் பொது பற்றுரிமை.

(c) Cash Reserve Ratio.

பண இருப்பு விகிதம்.

(d) Restrictive Endorsement.

கட்டுப்படுத்தப்பட்ட மேலெழுத்து.

(e) Banker as Agent.

முகவராக வங்கியர்.

(f) Pass Book.

செல்லேடு.

(g) Collecting Banker.

வசூலிக்கும் வங்கியர்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A District Board had its funds in a government treasury and used to withdraw money by issuing orders in the form of cheque. Whether it can be considered as cheque? Explain.

ஒரு மாவட்ட வாரியம், அரசு கருவூலத்திலுள்ள தனது நிதியை காசோலை வடிவத்தில் ஆணையாக வெளியிட்டு பணத்தை எடுத்தது. அது காசோலையாக கருதப்படுமா? விளக்குக.

9. Does hiring of a bank's Locker and storing things in the locker constitute Bailment? Whether the Banker hold the liability as Bailee for safe deposits? Explain.

வங்கி பாதுகாப்புப் பெட்டகத்தை வாடகைக்கு எடுத்து பொருட்களை வைப்பது ஒப்படைவாகுமா? பாதுகாப்புப் பெட்டகத்தை பொறுத்தவரை வங்கியர் ஒப்படைவு பெறுநர் பொறுப்பை ஏற்பாரா? விளக்குக.

10. A bill of exchange dated 31st August 2024, is made payable three months after date. Calculate the maturity date of payment for this bill of exchange.

ஆகஸ்ட் 31, 2024 என்று தேதியிடப்பட்ட மாற்றுச்சீட்டு அத்தேதியிலிருந்து 3 மாதங்களில் செலுத்தப்படுவதாகும். அம்மாற்றுச்சீட்டின் தொகை செலுத்துவதற்கான முதிர்வு தேதியை கணக்கிடவும்.

---